Registered as Newspaper at the G. P. O. Under No. G. B. 8935/78

# மனிதன்

மனிதன்
அஞ்சல் பெட்டி
எண் 81
யாழ்ப்பாணம்

விலை சதம் 50

ஆத்மா 2 | இராகம் 8 | பெப்ரவரி / 1979 | பக்கங்கள் 12

## மூன்றும் உலக அறிஞர்கள் மத்தியில்

# தைப்பொங்கலன்று வெடித்த தமிழீழம்?

## ✳ நாடகம் நடிக்கத் தடை ✳ பாட்டு இசைக்க இடையூறு

# உலக அரங்கில் உண்மை அம்பலம்

ஆசிய மெய்யியல் மகாநாட்டுக்கு இந்தோனேசியா, பிலிப்பின்ஸ், தாய்லாந்து, தைவான் இந்தியா, சிறிலங்கா, தமிழ் ஈழம், ஜப்பான், பசுபிக்தீவுகள் ஹொங்கொங், சிங்கப்பூர் பாகிஸ்தான் முதலிய நாடுகளிலிருந்தும், ஆபிரிக்க லத்தின் அமெரிக்க கண்டங்களிலிருந்தும் சிறிலங்கா நாட்டிலுள்ள வென்னப்புவவில் ஒன்று கூடிய 80 பேராளர்கள் (Delegates) ஆசியாவின் சேரிகளிலும், தொழிற்சாலைகளிலும், கிராமங்களிலும் ஒடுக்கப்படும். மக்களின் பிரச்சினைகளையும் ஏகாதிபத்திய அடக்குமுறையால் ஒடுக்கப்படும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சினைகளை ஆராய்ந்தார்கள்.

தை மாதம் 7ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை நடைபெற்ற இம்மகாநாட்டில் முதல் நான்கு தினங்கள் மக்கள் பிரச்சினை தொடர்பான வாழ்க்கை அநுபவம் பெற ஒதுக்கப்பட்டது. இந்நாட்களில் தமிழர் பிரச்சினையை ஆராய ஐந்து பேர் கொண்ட குழு பரந்தனிற்கு வந்தது. இக்குழுவினர் வெளியிட்ட அறிக்கை இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் எம் பிரச்சினைகளை மூன்றும் உலக அறிஞர்களுக்கு வெளிப்படுத்த நாடகம், பாட்டு முதலிய கலைவடிவங்களிலும் தயாராக இருந்தனர். இக்குழுவினர் ஆங்கிலத்தில் இயற்றிய பாட்டு அடுத்த மனிதன் இதழில் வெளியிடப்படும்.

தை மாதம் 14 திகதி நாம் மேற்கொண்ட முயற்சியால் மறுநாள் உலக அறிஞர்கள் 80 பேரும் காலையில் பாலமுது பொங்கி இறைவனுக்கு நன்றி கூறி தமிழர் விழாவின் மகிழ்ச்சியில் பங்கு கொண்டார்கள்.

தமிழர் பிரச்சினை தொடர்பாக பிஜி, பிலிப்ஞே, இந்தியா அறிஞர்கள் எழுதி மேடையேற்ற இருந்த நாடகத்தை சிறிலங்கா நாட்டு மேற்படி மகாநாட்டு அமைப்பாளர்கள் தம் சுயரூபம் வெளிப்படப் போகின்றதென அஞ்சி ஒத்திகை வேளையிலேயே தடை செய்தார்கள். இது அறிஞர்களிற்கு ஆத்திரத்தை மூட்டியது.

இவ்வறிஞர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட எழுத்தறிக்கையை 14ம் திகதி இரவு எல்லோரும் ஆர்வமாக படிப்பதை நான் அவதானித்தேன். அறிக்கை தெளிவாக போட்டோஸ்ரரத் செய்யப்பட்டிருந்தது.

★ தமிழ் ஈழ சமூக பொருளாதாரச் சிந்தனை இதழ் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும். உலக அறிஞர்......

நாடகத்தை மேடையேற்றுது தடை செய்ததினுல் சிறிலங்கா நாட்டு பேராளர்களின் நேர்மையின்மையை அறிந்த அறிஞர்கள் தாம் பேரவையில் வாசித்து வெளியிட இருந்த We shall not be moved என்ற ஆங்கிலப் பாடலை இரகசியமாகவே அச்சுப்பதிவு செய்து தைப் பொங்கலன்று காலை பொங்கல் விருந்துண்டபின் மகா நாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கி பங்களாதேஷ் அறிஞர் மொண்டேல் தலைமையை ஏற்ற பின் எல்லோருக்கும் வழங்கினுர்கள், அப்போது சிறிலங்கா நாட்டு பேராளர்கள் திகைப்படைந்தனர். எமது பிரச்சினை தொடர்பாக 'வாழ்வனுபவம்' பெற்ற குழுத்தலைவர் காஸ் கஸ்பர் இப்பாட்டில் எல்லோரும் பங்குபற்றுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினையை ஓரளவிற்கு ஆகுதல் விளங்கி கொள்ள முடியுமென்றும் தாம் ஐவரும் தமிழர் பகுதியையும் ஏனையோர் சிங்களவரின் பகுதியையும் படிக்கும் படி கேட்டுக் கொண்டார். ஒரு சிலவரிகளை படித்துக் காட்டினுர். அப்பொழுது சிங்களவர்கள் பலர் தாம் இதனைப் படிக்கமாட்டோம் என இடையூறு செய்தனர். சிலர் ஒலிவாங்கியண்டை சென்று இப்பாட்டிலுள்ளவை தவருனவை என வாதிட்டனர். இதனுல் அவையில் கொந்தளிப்பு ஏற்பட்டது. 10 நிமிடம் இவ்வாறு இழுபறி நடைபெற்றது. 30 நிமிடங்கள் மட்டுமே அறிக்கை சமர்ப்பிப்பதற்கோ நாடகங்கள் மேடை ஏற்றுவதற்கோ கொடுக்கப்பட்டது. இதனுல் ஆத்திரமடைந்த ஆபிரிக்க பெண்மணி ஒருவர் ஒலிவாங்கி அண்டை சென்று 'இன்று இப்பொழுதுதான் இம்மாகாநாடு தொடங்குகின்றது' என முழக்கமிட்டு விட்டு இருப்பிடம் சென்ருர். இந்நிலையில் குழுத்தலைவர் தமது சமர்ப்பித்தல் "முடிந்து விட்டது' என்று கூறி அவ்விடத்தை விட்டு நகர்ந்தார். அவையில் பலத்த சிரிப்பின் பின் அமைதி குடிகொள்ளத் தொடங்கியது. சில நிமிடங்களின் பின் பிலிப்பின்ஸ் நாட்டு அறிஞர் எழுந்து "மனிதனின்" கருத்தை அறிய விரும்புவதை பேரவைத் தலைவரிடம் கூறினுர்.

மனிதன் இயக்க பிரதிநிதியாக நான் இம்மகாநாட்டில் கலந்துகொண்டேன். நான் ஆற்றிய உரையினை கீழே தருகிறேன்.

ஆசிய அறிஞர்களே! ஆசியாவின் அரசியல் பொருளாதார சமுகப் பிரச்சினைகளை ஆழமாக அறிய இங்கு வந்துள்ள ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க அறிஞர்களே!

நன்றி! எமது மக்களின் பிரச்சினைகளை இரண்டு மூன்று தினங்களில் படித்து அறிக்கையாகவும் நாடகமாகவும் பாட்டாகவும் வெளியிட்ட மூன்றும் உலக அறிஞர்கட்கு தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எரித்திரியாவின் விடுதலைத்தாகம் கொண்ட மக்களோடும் பிலிப்பின்ஸில் பிரிவினைகோரும் மின்டாஞே மக்களோடும் இந்தோனேசிய ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருக்கும் கிழக்கு திமோர் மக்களோடும் பலஸ்தீன மக்களோடும் உங்களை ஒன்றுபடுத்தி அவர்களை இப்பேரவையில் பிரதிநிதித்துவம் செய்யும் உங்களிற்கு சிங்கள ஏகாதிபத்தியத்தின் காலனித்துவ நாடாக உள்ள தமிழ் ஈழ மக்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளல் கடினமான தொன்றல்ல. இப் பேரவையிற்ருனே சற்றுமுன் நடந்த நாடகம் எம் பிரச்சினையின் ஆழத்தை உங்களிற்கு வெளிப்படுத்தியிருக்கும்.

பிரிவினை அல்ல. வரலாற்று ரீதியாக சில தகவல்களை உங்களிற்கு வழங்குதல் இத்தருணத்தில் அவசியமெனக் கருதுகிறேன். சிறிலங்கா தமிழ் ஈழம் எனும் இருநாடுகளின் இணைப்பே இன்றைய இலங்கைக் குடியரசாகும். இலங்கை முழுவதிலும் கிறிஸ்து சகாப்தம் ஆரம்பிக்கும் முன்பே தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்தனர். சில காலங்களில் சிங்கள மன்னர்களும் சில காலங்களில் தமிழ் மன்னர்களும் இலங்கை முழுவதையும் ஆண்டனர்.

வர்த்தக நோக்கத்தோடு கீழைத்தேசங்களிற்கு வந்த போத்துக்கேயர் படைப்பலத்தினுல் எம் தாயகமான தமிழ் ஈழத்தை வெற்றி கொண்டு இலங்கைத்தீவின் தனி இராச்சியமாக ஆட்சிசெய்தனர், ஒல்லாந்தர் ஆட்சியிலும் எம் நாடு தனியாகவே ஆளப்பட்டது.

1796ம் ஆண்டு தமிழ் ஈழ ஆட்சி ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் கைக்கு மாறியது. நிர்வாக வசதிக்காக பிரித்தானிய ஏகாதிபத்தியம் எம் நாட்டையும் சிங்கள நாட்டையும் ஒன்றிணைத்து ஆட்சி செய்தனர். எனவே நாம் கோருவது பிரிவினை அல்ல. ஆங்கில ஏகாதிபத்தியத்தை வெளியேற்றுவதற்கு தமிழ் - சிங்கள தலைவர்கள் ஒன்று சேர்ந்து செயற்பட்டார்கள். 1948 இல் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கைத் தீவை விட்டு நேரடியாக நீங்க சிங்கள ஏகாதிபத்தியம் தமிழீழத்தை தன் காலனித்துவ நாடாக்கி தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து வருகிறது. 31 வருடகால சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையால் தமிழ் இனம் படும் இன்னல்களை உங்களிற்கு சுருக்கமாக கூற முயலுகிறேன்.

1 1948ம் ஆண்டே ஆக்கப்பட்ட குடியுரிமைச் சட்டத்தினுல் இலங்கைத் தீவின் செல்வச் செழிப்பிற்கே மூலகாரணமாயிருந்த மலைநாட்டு தோட்டத் தொழிலாளர் தம் குடியுரிமையை இழந்து நாடற்றவர் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

2 சிங்கள அரசாங்கங்கள் தமிழ் ஈழத்தில் மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினுல் எமது நாட்டின் 1/3 பகுதி நிலத்தை சிங்களவர் ஆக்கிரமித்துள்ளார்கள்.

3, தமிழ் தேசிய இனத்தின் மீது ஆதிக்க மொழியாக சிங்களம் திணிக்கப்பட்டதனுல் அது தனது தனித்தன்மையை இழந்து விடும் அபாய நிலையிலுள்ளது.

4. சிங்கள ஏகாதிபத்திய அடக்குமுறையால் தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மை மங்கி மறைந்து அழியும் நிலையிலுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

5. பல்கலைக்கழக அனுமதியில் இனரீதியான அனுமதி முறை நடைமுறையில் இருந்து வருகிறது. தற்பொழுது தரப்படுத்தல் கைவிடப்பட்டதாக கூறி அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய திட்டம் முன்னைய கல்வித் திட்டத்தை விட தமிழ் தேசிய இனத்தை பாதிக்கின்றது.

6. தொழில் வேலைவாய்ப்பில் இனரீதியான பாகுபாடு எல்லா வகையான தொழில் துறைகளிலும் இருந்து வருகிறது.

7. தமிழ் ஈழ பொருளாதார அபிவிருத்தியில் சிங்கள அரசு அக்கறை எடுப்பதில்லை.

8. தமிழ் தேசிய இனத்திற்கு எதிராக சிங்கள அரசினலும் சிங்கள மக்களாலும் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட 1956, 1958, 1961, 1974, 1976, 1977 1978, 1979 இனஒடுக்கல் நடவடிக்கைகளால் 1000 இற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல லட்சக்கணக்கான எம் உடைமைகள் சூறையாடப்பட்டன.

இன்னும் விபரித்துக் கொண்டே போகலாம். ஆனல் தமிழ் தேசிய இனத்தின் சார்பில் நான் உலக அறிஞர்களாகிய உங்களிடம் கோருவது எமது பிரச்சினை தொடர்பாக 3ம் உலகநாடுகள் மத்தியில் பிரசாரம் செய்து 3ம் உலகநாடுகளின் ஏகோபித்த தாக்கம் சிறிலங்கா அரசின் கண்களைத் திறக்கச் செய்யவேண்டுமென்பதே. எமது மக்களை நாம் ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு தயார் செய்வோம். இழந்த எம் நாட்டை மீட்கும் போராட்டத்திற்கு நீதியான எங்கள் போராட்டத்திற்கு நீங்கள் ஆதரவு தாருங்கள். உங்கள் நாட்டு பிரச்சினையை எங்களிற்கு அறிவியுங்கள், நாம் எம் இயக்கப் பத்திரிகையான 'மனிதன்' மூலம் எம் மக்களிற்கு உங்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வோம். உலகெங்கனும் உள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கு நாம் குரல் கொடுப்போம். உலகெங்கனும் உள்ள அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களோடு எங்களையும் ஒன்றுபடுத்தி கொள்ளுேம். உலகெங்கும் உள்ள தொழிலாளிகளோடு சேர்ந்து ஒரு புதிய உலகத்தை ஒரு புதிய பொருளாதார அமைப்பை (New International Economic Order) தொழிலாளிகள் உலகத்தை உருவாக்க தமிழ் ஈழத் தொழிலாளிகள் ஆவலோடு உள்ளார்கள்.

தைப்பொங்கல் தினமாகிய இன்று பங்களாதேஷ் அறிஞர் மொண்டேல் இப்பேரவைக்கு தலைமை தாங்குவது எனக்கு ஐக்கிய நாடுகள் சபையின் ஆற்றுத்தன்மையை நினைவூட்டுகின்றது. அறிஞர் மொண்டேலிற்கு தெரியும் லட்சக்கணக்கான பங்களாதேஷ் மக்கள் இறந்த பின்னரே பங்களாதேஷ் பிரச்சினைபற்றி ஐ. நா வில் குரல் எழுப்பப் பட்டது. அதே நிலைமை எமக்கும் ஏற்பட நீங்கள் விரும்புகிறீர்களா?

எனது நெஞ்சிலிருக்கும் பொங்கல் வாழ்த்திதழ் தமிழ் மக்களின் இன்றைய அடிமைத்தனத்தை சித்தரிக்கின்றது. கடினமாக வயலில் உழைக்கும் தமிழ் விவசாயி தான் உண்மையான சுதந்திரப் பொங்கல் கொண்டாட முடியுமா என சிந்திக்கிறுன். அடிமைத்தளை அறுக்கப்பட்டால் எல்லாத் தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து சுதந்திரப் பொங்கல் கொண்டாட முடியுமென்பதையே இப்படம் சித்தரிக்கின்றது. அடிமைப்பட்டுள்ள எம் இனம் எம் உழைப்பின் பயனை சுதந்திரத்தில் பொங்கலாக அநுபவிக்க விரும்புகின்றது. இதுவே 1979 தைப்பொங்கலின் மனிதன் விடுக்கும் செய்தியாகும்.

அறிஞர்களே எமது செய்தியை ஆர்வத்தோடும் அமைதியோடும் செவிமடுத்ததற்கு நன்றி கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்,

இதன் பின் நடந்தவற்றையும் மகாநாட்டில் நடைபெற்ற வேறு பல சுவையான நிகழ்ச்சிகளையும் அடுத்த இதழில் வாசகர்களுக்கு வழங்குவோம்.

## அறிஞர்களின் அறிக்கை

ஆசிய மக்களின் அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினை தொடர்பாக ஆராய நீர்கொழும்பு வென்னப்புவவில் கூடிய மூன்றும் உலக அறிஞர்களில் ஒரு குழுவினர் பரந்தனிற்கு வந்து மூன்று தினங்களாக தமிழ்மக்களில் ஒருபகுதியினரோடு வாழ்ந்து பெற்ற அநுபவத்தால் எமது பிரச்சினைகள் பற்றி உலக அறிஞர்களிற்கு வெளியீட்ட எழுத்து அறிக்கையின் பெரும் பகுதி இங்கு வெளியிடப்படுகின்றது. பரந்தனிற்கு வாழ் வநுபவம் பெறவந்த குழுவில் இந்திய அறிஞர் கலாநிதி ரசல் சந்திரன் பிஜி நாட்டைச் சேர்ந்த அறிஞர் லெயோன் றஸ்லாலா பிலிப்பின் நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள் கா. சுஸ்லின்ரோ, கால்கஸ்பர் சிறிலங்கா நாட்டைச் சேர்ந்த தோழர் எயின்வலிவி சமரஜீவா ஆகியோர் அடங்குவர்

வின்மமடு அகதிகள் (?) ஆவணி இன ஒடுக்கலில் இடம்பெயர்க்கப்பட்ட தர்மபுர விவசாயிகள் ஆசிரியர்கள் ஆாசியல்வாதிகள், இளைஞர்கள் நிலமற்ற விவசாயிகள் முதலியோரைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தோம். காந்தி நிலையம் குருகுலம் இந்துப் பாடசாலை கருணை நிலையம் ஆகிய இடங்களையும் தரிசித்தோம்; கிளிநொச்சியில் தொண்டர்கள் இலங்கை சுயசேராக சங்கத்தினர் வைத்தியர்கள், அகதிகள் புனர்வாழ்விலீடுபட்டுள்ள குரவர் ஆகியோரையும் சந்தித்தோம்.

நாம் புகையிரதத்தில் பிரயாணம் செய்யும் பொழுதே எமது சகபிரயாணிகளிடம் இப்பிரச்சினை தொடர்பாக விசாரித்தறிந்தோம். அத்துடன் யாழ் நகரிற்கு செல்லத் தடை விதிக்கப்பட்டது;

[ம. ப. பா.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிங்களவரின் ஆதிக்கத்திலிருக்கும் இலங்கையில் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் பற்றிய ஒரு அமைப்பு ரீதியான நோக்கு

## பொருளாதார

1. வேலை வாய்ப்புகளில் பாகுபாடு, குறிப்பாக அரச உத்தியோகங்களில்.
2. கமம் செய்வதற்கு குறைந்தளவு காணி, யாழ் குடாநாடு நீரின்மையால் பயிர்ச் செய்கைக்கு உகந்ததன்று.
3. உத்தியோக மொழிக் கொள்கையால் வேலை வாய்ப்பின்மை.
4. தமிழ்ப் பகுதிகளில் சிங்களவரை திட்டமிட்டு பெருமளவில் குடியேற்றுதல். அரசாங்கம் 1956 — 65 ஆண்டு இடைக்காலத்தில் பெருமளவு தமிழர்களின் காணிகளை சிங்களவர்களுக்கு கொடுத்துள்ளது.
5. அரசாங்கத்தின் உற்பத்திப் பொருள்களுக்கான விலை நிர்ணயம் தமிழர்களுக்குப் பாதகமானது.
6. வேலை வாய்ப்புகளை உருவாக்கும் தொழிற்சாலைகள் பெருமளவில் சிங்களப் பகுதிகளிலேயே உண்டு.
7. தமிழ்ப் பகுதிகளின் போக்குவரத்து வசதிகள் கவனிக்கப்படுவதில்லை.

## அரசியல்

1. 160 பாராளுமன்ற உறுப்பினர்களில் 18 பேர் மட்டுமே தமிழர்கள்.
2. தமிழ் மக்களுக்கு சாதகமான கட்சிகள் இல்லை. எல்லா பெரிய அரசியற் கட்சிகளும் சிங்களவர்களாலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
3. முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது தமிழரின் கருத்துக்கு அரசு செவிமடுப்பதில்லை.
4. அரசியற் கட்சிகளின் தோல்விகளின் போது தமிழ் எதிர்ப்பு இனவாதக் கருத்துக்கள் வளர்க்கப்படுகின்றன.
5. அரசின் சமூக சேவைத்திட்டங்களில் தமிழ்ப் பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.
6. கலவரகாலங்களில் தமிழரின் உயிர் உடமைகள் காவல்படையின் உதவியோடு பறிக்கப்படுதல்.
7. சந்தேக நபர் எனும் பெயரில் தமிழர்களை கைது செய்து தடுப்புக் காவலில் வைத்தல்.

## கலாச்சார

1. தமிழர் சிங்களம் கற்கும்படி திணிக்கப்படுகிறார்கள். கடிதத் தொடர்புகள் அனைத்தும் சிங்களத்தில்.
2. பாடசாலைகளில் தரப்படுத்தல்
3. தமிழர் எதிரி என சிங்கள மக்களிற்கு கற்பிக்கப்படுகிறது.
4. தாழ்த்தப்பட்டுள்ள சாதித் தமிழரை பௌத்தர்களாக மாற்றுதல்.
5. பாடசாலைகளில் கோட்டா முறை.
6. இந்தியாவுக்கு போகும்படி தமிழர் வெருட்டப்படுகிறார்கள்.
7. பிரச்சினைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்க அச்சம்.

## தமிழரின் கருத்துக்கள் :

தமிழ்ச் சமூகத்திலுள்ள மத்திய, உயர் வகுப்பினர் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி அதிக அக்கறை கொண்டவர்களாகக் காணப்படவில்லை. இவ் வகுப்பினர் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள மத்திய, உயர் வகுப்பினருடன் நல்லுறவுகளை கொண்டுள்ளார்கள். இவ் வகுப்புப் பிரிவுகளைச் சேராதோரே பிரதானமாக சமுதாய மாற்றத்தை விரும்புகிறார்கள். இவ் இரு வகையான வகுப்பினரினதும் கருத்துக்கள், தம் பிரச்சினைக்கான தீர்வு அதனை அடையும் முறை என்பவற்றை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

| | தீவிரவாதிகள் | அஹிம்சாவாதிகள் |
|---|---|---|
| யார் ? | முக்கியமாக இளைஞர்கள் மாணவர்கள், உத்தியோகத்தர்கள். | முதியோர் |
| தீர்விற்கான நோக்கு ( Vision ) | தமிழ் ஈழம் | மாநில சுயாட்சி அல்லது சமஷ்டி. (சிலர் தமிழ் நாட்டை விரும்பிய போதும் அண்மைக் காலத்தில் தான் அவர்கள் நிலையில் இம் மாற்றம் ஏற்பட்டது.) |
| முறை | ஆயுதம் தாங்கிப் போராடுதல். | அகிம்சை முறையில் அமைதியான வழியில் பாராளுமன்ற மார்க்கமாக. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கோழி வளர்ப்பு

ஸ்ரீலங்காவின் ஆயுத பலத்துள் அடங்கி வாழும் தமிழ் ஈழமக்கள், என்றோ ஒரு நாள் அதை உடைத்து எறிந்து தமது தாயகமாம் தமிழ் ஈழத்தை மீட்டே ஆகவேண்டும். எமது விடுதலை ஒரு அதிகார பங்கு போடல் ஆகமட்டும் இருந்துவிடுமேயானால் அதன் விளைவு வறுமை, பசி, பட்டினி, நோய் ஆகியவற்றையே நாம் போராடி பெற்றதாக முடியும். அதுமட்டுமல்லாது எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில், நமது போராட்ட வீரர்களிற்கு தேவையான உணவிற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தையே நம்பி இருப்போமானால், அவர்கள் அங்கிருந்து நமக்கு வரும் உணவை கட்டுப்படுத்துவதன் மூலம், எமது போராட்டத்தை இலகுவில் நசுக்கிவிடலாம். எனவே நாம் நமது தாயகத்தை மீட்கும் போராட்டத்தை நடாத்தும் அதே வேளையில் நமது பொருளாதாரத்தையும் கட்டி எழுப்ப உழைக்க வேண்டும். இதன் ஓர் அங்கமாகவே, நாம் வீட்டிற்கு '25'கோழி வளர்ப்புத்திட்டத்தை உங்களிற்கு அறிமுகப்படுத்துகிறோம்.

இங்கு நாம் கூறப்போவது பெரும் பண்ணைகளை அமைத்து பணக்காரர்களாக வருவதற்கல்ல நாளும் வறுமையில் வாடும் மக்களை வளமாக வாழவைப்பதற்காகவே, வீட்டிற்கு 25 கோழிகள் என்னும் அடிப்படையில் வளர்க்கும் போது தனித்தனி ஒவ்வோர் கோழிகளிற்கும் கிடைக்கும்மனித பராமரிப்பு, பெரும்பண்ணைகள் அமைத்து கோழிகளை வளர்க்கும் போது ஒவ்வோர் கோழிக்கும் கிடைக்கும் மனித பராமரிப்புடன் ஒப்பிடும் போது மிக அதிகமாகும். இதன் விளைவு நமக்கு கிடைக்கும் இறுதி வருமானம் மிகக் கூடுதலாக இருப்பதோடு, பெறப்படும் வருமானம் தமிழ் ஈழம் முழுவதும் பரவலாக்கப்படும் அதே வேளையில், எல்லா மக்களும் முட்டையை தமது உணவுடன் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. அன்றி பண்ணை முறையில் அமைக்கும் போது பெறப்படும் வருமானம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட நபரை நோக்கி செல்லும் முறையே உருவாகும். இம்முறையால் நாம் முதலாளி தொழிலாளி என்ற வர்க்க பேதம் உருவாக காரணமாகிறோம்.

நாம் நமது வீடுகளில் இரண்டு முறையாக கோழி வளர்ப்பை நடை முறைப்படுத்தலாம்.

(a) முழு நேர அடைத்து வளர்த்தல் [Intensive Method]

(b) பகுதி நேர அடைத்து வளர்த்தல் [Semi Intensive Method]

குறைந்த எண்ணிக்கையில் கோழிகளை வளர்ப்பதற்குப் பகுதி நேர அடைத்து வளர்த்தல் முறையே சிறந்ததாகும். ஏனெனில் அவற்றிற்கு தேவையான இடவசதி, உணவு ஆகியவற்றை குறைந்த அளவில் கொடுப்பதோடு, அவற்றை வெளிச்சூழலுடன் கூடுதலான தொடர்பைப் பெற அனுமதிக்கின்றோம். இதன் பிரகாரம் அவை தம்மை வெளிச்சூழலிற்கு இசைவாக்கி கொள்வதோடு, சிறுதாவரங்களையும், புற்களையும் உண்பதன் மூலம் விற்றமின் A யையும், சூரிய ஒளியில் நடமாடுவதால் விற்றமின்-Dயையும் பெறுகின்றன. அதோடு நிலம் வாழ் சிறு உயிர்களை உண்பதால் தமது புரதபோசாக்கை கூட்டி கொள்கின்றன.

நாம் நமது வீடுகளில் கோழிகளை வைத்து பராமரிப்பதற்கு மிகவும் முக்கியமாக தேவைப்படுவது "கூடு" ஆகும். கூடுகளை பல முறைகளில் அமைத்து கொள்ள முடியுமெனினும், மிகவும் இலகுவானதும், செலவுகுறைந்ததுமான ஓர் முறையை இங்கு தருகிறோம். முழு நேர அடைப்பு வளர்ப்பில் ஒரு முதிர்ந்த கோழிக்கு தேவையான சராசரி நிலப்பரப்பு 4 ச. அடியாகும். ஆனால் பகுதி நேர அடைப்பு வளர்ப்பு முறையில் ஓர் கோழிக்கு 2 ச. அடி போதுமானதாகும். எனவே, '25' கோழிகளிற்கும் 50 ச. அடி தேவையாகும். கூட்டை நாம் 10' நீளமும் 6' அகலமும் கொண்டதாக அமைக்கும்போது, 50 ச. அடியிலும் சற்று அதிகமான உட்பரப்பைப் பெற முடிகிறது.

ஓர் கூட்டை அமைக்கும் போது முக்கியமாக மூன்று பகுதிகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) களம்:- இதை சிமென்றினால் இடுவது மிகவும் நன்று. இல்லை ஆயின் மழைகாலங்களில் நீர் கசிந்து வருவதுடன் நில எலிகளும் வர ஏதுவாகிறது. வசதி அற்றோர் மண்ணினாலேயே ஆக்கிக் கொள்ளலாம்.

(ii) சுவர்:- கூட்டை சுற்றிவர 2' - 2½' உயரத்தில் சுவர் வைத்தல் அவசியமாகும். இதை நாம் மண்ணினாலோ அன்றி, சிமென்றினாலோ ஆக்கிக் கொள்ளலாம். மிகுதிப் பகுதியைக் காற்றோட்டத்திற்கு வசதியாக, கம்பிவலையினாலோ அன்றி பனை மட்டையினாலோ ஆக்கிக் கொள்ளலாம்.

(iii) கூரை:- இதனை நாம் தகரத்தினாலோ, அஸ்பெஸ்ரொஸ் சீற்றினாலோ (Asbestos Sheet) அன்றி கிடுகினாலோ, வேய்ந்து கொள்ளலாம். இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது யாதெனில் மழை காலங்களில் தூவானம் அடித்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு கூட்டின் நான்கு பக்கமும் ஆகக்குறைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமும்

மனித சமுதாயத்தைச் சீர்திருத்த, வழிப்படுத்த எழுந்தன மதங்கள். மார்க்சியத்தின் நோக்கமும் இதுவே. ஆயினும் மதம் மக்களின் அபின் என்று மார்க்ஸ் வர்ணித்தார். சமுதாய மாற்றத்திற்கு சமுதாய முன்னேற்றத்திற்கு மதம் குறுக்கே நிற்பதாக அவர் கருதினுர். சுரண்டல் சமுதாய முறையை நிலை நிறுத்தும் சாதனங்களில் மதமும் ஒன்று என அவர் கூறினுர்.

மார்க்ஸ் கொண்ட இக்கருத்துச் சரிதானு? மதங்கள் பெரும் பாலும் அன்பு, உண்மை, நீதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை. எனவே இவை சமூக நீதிக்கு எவ்வாறு முரணுனவையாய் இருக்கமுடியும். மதம் என்னும் போது அது மதவாதிகளையோ மதஸ்தாபனங்களையோ குறிப்பதாக கருத முடியாது. மதங்களில் உள்ளடக்கியுள்ள உண்மைகள், கோட்பாடுகள், போதனைகள் என்பனவே மதங்களின் அடிப்டையாகும். மதவாதிகளும் மதஸ்தாபனங்களும் சில காலப் பகுதிகளில் தவறுன வழியில் நடக்கலாம். அந்தத் தவறு அவர்களில் உள்ள தவருக இருக்க முடியுமேயொழிய மதங்களில் உள்ள தவறு எனக்கொள்ள முடியாது.

சமுதாயத்தைச் சுரண்டிப் பிழைப்பவர்கள் தங்கள் சுரண்டல் வேலைக்கு எவற்றை பாவிக்க முடியுமோ அவற்றையெல்லாம் பாவித்து இருக்கிருர்கள், பாவித்து வருகிருர்கள். இந்த வகையில் மதமும் அவர்கள் கையிலிருந்து தப்பவில்லை; அவர்கள் மதக் கோட்பாடுகளைத் தங்களுக்கு சாதகமாகத் திரித்து விளக்கம் கூறினுர்கள்.

இறைவன் கொடுத்த பத்துக்கட்டளைகளில் "பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக" என்பது நான்காவது கட்டளையாகக் கிறிஸ்தவர்களால் கொள்ளப்படுகிறது. பிதா, மாதா என்பதற்குள் எமக்கு உண்மைப் பாதுகாவலர்களாக போஷகர்களாக உள்ளவர்கள் அனைவரும் அடக்கப்படுகிருர்கள் முதலாளிகள் தாங்களும் இப் பகுப்புக்குள் அடங்குவதாகக் குறிப்பிட்டுத் தொழிலாளர் தங்களை எதிர்ப்பது இறைவனது நான்காவது கட்டளைக்கு விரோதமான செயல் என விளக்கம் கொடுத்தார்கள். இது அக்காலத்தில் பல மதவாதிகளாலும் ஏற்கப்பட்டது. அதே நேரத்தில் முதலாளிகள் பாதுகாவலர்களாகவல்ல தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டும் திருடர்களாக இருந்தார்களென்பது வலியுறுத்தப்படவில்லை. முதலாளிகளின் செயல் இறைவனின் பத்துக் கட்டளைகளில் ஒன்றுன "களவு செய்யாதிருப்பாயாக" என்னும் கட்டளைக்கு விரோதமானது என்பது எடுத்துக் காட்டப்படவில்லை. "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்று கிறிஸ்துநாதர் எடுத்துக் காட்டிய பத்துக் கட்டளைகளின் சாரம்சத்திற்கு எதிரானது என்பது எடுத்துக் கூறப்படவில்லை.

இதே போன்று "பிறர் உடைமையில் ஆசை கொள்ளாதிருப்பாயாக" என்னும் கட்டளை தொழிற்சாலைகளை தமது உடமையாக (சமூக உடைமையாக) ஆக்குவதற்கு எதிரான வாதமாகப் பாவிக்கப்பட்டது. தொழிற்சாலை முதலாளியின் சொத்து. அதை எடுக்க முற்படுவது பத்தாம் கட்டளைக்கு விரோதமானது என விளக்கம் கொடுக்கப்பட்டது. ஆனுல் அதே நேரத்தில் தொழிற்சாலை பெரிதும் தொழிலாளியின் உழைப்பில் தான் உருவாகியது. முதலாளி தன் முதலின் (பெரும்பாலும் சுரண்டல் மூலம் பெறப்பட்ட) சன்மானத்திற்கும் எவ்வளவோ மேலதிகமான தொகையை அதிலிருந்து பெற்றுள்ளான். எனவே தொழிற்சாலையின் உண்மையான சொந்தக்காரன் அதனை உருப்படுத்திய (உழைப்பின் மயனை) தொழிலாளிகளே. அவர்கள் சொத்தை அபகரித்து வைத்திருக்கும் முதலாளியே பத்தாம் கற்பனைக்கு விரோதமான செயலை செய்பவனுவான் என்பது வலியுறுத்தப்படவில்லை.

பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா பிராமண சத்திரிய சூத்திர என்னும் பகுப்புக்களை மனிதர்களுடைய குணங்களை அடிப்படையாகக் கொண்டு பகுத்தார். மனிதர்களில் சிலர் தயை, அன்பு, சாந்தம், தெளிந்தமனம் முதலிய பண்புகளை அதிகம் கொண்டவர்களாக இருக்கிருர்கள், சிலர் வீரம் ஆவேசம். வைராக்கியம் முதலிய பண்புகளை உடையவர்களாக இருக்கிருர்கள். சிலர் குறிப்பிடக்கூடிய அளவு தீவிரம், முயற்சி குறைந்தவர்களாக, மந்த குணம் படைத்தவர்களாகக் காணப்படுகிருர்கள். இவர்களையே இவர்களது குண அடிப்படையின் முறையே பிராமணர், சத்திரியர், சூத்திரர் எனப் பகவத்கீதையில் கூறப்பட்டது. இம்மூன்று குணங்களையும் பகுத்துக்காட்ட முறையே வெள்ளை, நீலம், கறுப்பு என்ற வர்ணங்கள் கொடுக்கப்பட்டன. இந்தியாவில் புகுந்து தம் ஆதிக்கத்தை ஏற்படுத்திய ஆரியர்கள் தாம் வெள்ளைத் தோலுடையவர்களாதலால் தங்களையே உயர்ந்தவர்களென்று பகவான் கிருஷ்ணனே கூறியிருப்பதாகவும் திராவிடர்கள் கறுத்தத் தோலுடையவர்களாதலால் அவர்கள் தாழ்ந்தவர்கள் எனவும் கீதையின் கோட்பாடுகளைத் தமக்குச் சாதகமாக விளக்கி தமது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த முற்பட்டனர்.

இதிலிருந்து நாம் மதங்களை, ஆளும் வர்க்கத்தினர் தமக்குச் சார்பாகத் திரித்து விளக்கம் கூறியும், விளக்கம் கூறவைப்பித்தும், தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டுள்ளதை காணமுடிகிறது. எனவே மதங்கள் பொதுவாக அன்பு, நீதி என்பனவற்றை வலியுறுத்தும் கோட்பாடுகளையே கொண்டனவாய் விளங்கின என்பதும் ஆளும் வர்க்கத்தினர் இவற்றிக்கு திரித்து விளக்கம் கூறி தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட இப்படிப்பட்ட திரிபுகளைப் பாவித்து மதங்களை மாசுபடுத்தியுள்ளனர் என்பதை நாம் காணமுடிகிறது. எனவே பொதுவாக மதங்கள் சுரண்டலையும் ஆக்கிரமிப்பையும் ஏற்பனவாக என்றும் அமையவில்லை என்பது புலனுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மார்க்சீயமும்

மதத்தலைவர்கள் எனப்பட்டவர்களும், மதஸ்தாபனங்களும் பல சந்தர்ப்பங்களில் பிழையாக நடந்துள்ளார்கள். நடந்தும் வருகிறார்கள் என்பதும் உண்மைதான். மகாவீரர், புத்தர், கிறிஸ்து நாதர் என்போர் தமது காலத்தில் மதத்தலைவர்களைக் கண்டித்துள்ளார்கள் அவர்கள் மதம் காட்டும் வழியிலிருந்து பிறழ்ந்து பிழையான வழியில் நடந்ததைக் குறிப்பிட்டுக் காட்டி அவர்களைக் கண்டித்துள்ளார்கள் ஆகவே மதத்தலைவர்களும் ஸ்தாபனங்களும் அடக்கி ஆளும் வர்க்கத்தினருக்கு ஆதரவாக இருந்தால் அதற்கு மதத்தின் மீது குறைகாண முடியாது.

மதங்கள் ஒழுக்க நியதிகள், அன்பு சமத்துவம் என்பவற்றை கூறுகின்றன. "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்பது இறைவன் கட்டளைகளின் சாரம்சம் இரண்டில் ஒன்று என கிறிஸ்து நாதர் எடுத்துக் கூறியுள்ளார். இறைவனை நேசித்து வணங்கு என்பதுபோல் இதுவும் சம முக்கியத்துவம் உடையது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அயலவனை நேசியாது இறைவனை நேசிக்க முடியாது எனக் காட்டியுள்ளார். இஸ்லாம், பௌத்தம், இந்துமதம் என்பனவும் அன்பு சமூக சகோதரத்துவம் என்பவற்றைக் எடுத்துக் கூறுகின்றன எனவே சமூக சமத்துவத்தைச், சகோதரத்துவத்தைப் போதிக்கும் மதங்களுக்கும் இக்கொள்கைகளை அமுல் நடத்த முற்படும் மார்க்சிசத்திற்குமிடையில் குரோதம் இருக்கவேண்டிய அவசியமில்லை.

மார்க்ஸ் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும், அதனைத் தொடர்ந்தும் மதவாதிகளும் மதஸ்தாபனங்களும் ஆளும் வர்க்கத்திற்குச் சார்பாக இருந்துள்ளனர். மதங்களுக்கு மக்கள் மேலிருந்த செல்வாக்கு ஆளும் வர்க்கத்தினர் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தப் பயன்படுத்தி வந்தனர். தமது ஆதிக்கத்திற்கு எதிரான புதிய கொள்கைகள் புதிய கருத்துக்கள் தலை காட்டிய பொழுது மத உணர்ச்சிகளைக் கிளறி அக்கருத்துக்களைக் கொள்கைகளை நசுக்க முற்பட்டுள்ளனர். மதக் கோட்பாடுகளுக்குப் பிழையான விளக்கம் கொடுத்து தமது ஆதிக்கத்தைச் சுரண்டலை மக்களை ஏற்க வைத்தனர். இதனால் தான் மார்க்ஸ் மதங்களை சாட முற்பட்டார். மதங்களுக்கும் மார்க்சியத்திற்குமிடையில் குரோதம் ஏற்பட்டது. இது பல நாடுகளிலும் நசுக்கும் வகுப்பினருக்கு வாய்ப்பாக மாறியது. சமதர்ம அடிப்படையில் அமைந்த மார்க்சீய கருத்துக்கள் பரப்புவதைத் தடுக்க இவர்கள் இக்குரோதத்தை மேலும் வளர்த்துப் பயன்படுத்தினர், பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய காலகட்டத்தில் மேற்குறிப்பிட்ட குரோத மனப்பான்மை தொடர வேண்டியது அவசியம் தானா? அது தற்போதைய கால கட்டத்திற்குப் பொருத்தமானதா என்பதை நாம் எடுத்து நோக்க வேண்டும் மதங்கள் என்றும் சகோதரத்துவத்தையும் சமூக நீதியையுமே வலியுறுத்தி வந்துள்ளன. இதில் ஒருபோதும் மாற்றம் இருக்கவில்லை, ஆனால் மதவாதிகள், மதஸ்தாபனங்கள் சில காலப்பகுதிகளில் இக்கோட்பாடுகளை வலியுறுத்தாது இருந்து வந்துள்ளனர். ஆளும் வர்க்கத்தினருக்கு சார்பாக நடந்துள்ளனர். கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் தற்போது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. சமய வாதிகளுடன் சமய ஸ்தாபனங்களும் நசுக்கி ஆளுபவர்களுக்கு எதிராக, நசுக்கப்படுபவர்களின் சார்பாக கூடுதலாக குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். தென் அமெரிக்காவிலுள்ள நாடுகளில் நசுக்கி ஆளும் அரைமானிய அரைமுதலாளி வர்க்கத்திற்கு எதிராகவும் அவர்களை ஆதரிக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிராகவும் கிறிஸ்தவ மதவாதிகளும் மதஸ்தாபனங்களும் போர்க் கொடி பிடிக்கத் தொடங்கியுள்ளனர். தென் ஆபிரிக்கா பிலிப்பைன்ஸ் முதலிய நாடுகளில், மதஸ்தாபனங்களும், மதத்தலைவர்களும் அடக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக போராட்டங்கள் நடத்துகின்றனர். சிறை செல்கின்றனர். வியட்நாமில் மத்திய வகுப்பினரதும் அமெரிக்கரதும் ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போரில் பௌத்த மதத்தலைவர்களுடன் பௌத்த மத ஸ்தாபனங்கள் பெரும் பங்கு வகித்தன.

ஆகவே உண்மை மதவாதிகளுக்கும் உண்மை மார்க்சீய வாதிகளுக்குமிடையே ஒருவர் ஒருவர்க்கிடையிலான விளக்கம் ஏற்படவேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. மதவாதிகளும், மதஸ்தாபனங்களும் விட்ட பிழைக்கு மார்க்ஸ் மதங்களைச் சாடியது சரியானதல்ல என்பதை மார்க்சீயவாதிகள் உணரவேண்டும். மார்க்ஸ் வாழ்ந்த காலகட்டத்தில் தமது புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும் பரப்ப மதங்களைச் சாடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அந்நிலை தொடர்ந்து பரவலாக இப்போது இல்லை' சமூகநீதியையும் சமத்துவத்தையும் போதிக்கும் சமயங்களுக்கும் இவற்றை நிலைநாட்ட முற்படும் மார்க்சீயத்திற்குமிடையில் குரோதத்தை வளர்த்து சுரண்டி வாழும் வர்க்கத்தினர் தமது ஆதிக்கத்தை தொடர்ந்து நீடிக்க முயன்று வருகிறார்கள் என்பதை இருசாராரும் உணர்தல் வேண்டும். மதங்களால் சமுகநீதி சமதர்மம் என்பவற்றை போதிக்க முடியும். பலரது மனங்களை மாற்ற முடியும். ஆனால் அவற்றை கடைப்பிடிக்க மறுப்பவர்களை கட்டுப்படுத்தி நடக்கச் செய்வது இயலாது. மார்க்சீய அடிப்படையில் அமைந்தபூரணசோசலிஷ அரசினால்தான் இப்படிப்பட்டவர்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவே சமுக உடமை முறையை ஏற்படுத்துவதன் மூலம் தான் சமதர்மத்தையும் சமூகநீதியையும் பூரணமாக ஏற்படுத்த முடியுமென்பதை மதவாதிகள் உணரவேண்டும். அதே நேரத்தில் மதங்களை வளர்ப்பதன் மூலம் மக்கள் மனதை பண்படுத்தி மனமார எல்லோரையும் சமூக சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை ஏற்கச் செய்யமுடியும் என்பதை மார்க்சீயவாதிகள் உணரவேண்டும். அப்போது தான் லௌதீக விடுதலையும் ஆன்மீக விடுதலையும் கொண்ட ஒரு முழுமையான சுதந்திர சமுதாயத்தை உருவாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தாய்க் குலமே திரள்க!

— மாதுரி —

பெண் அடிமைத்தனத்தை எதிர்த்துப் பூரண சமத்துவமும், சுதந்திரமும் நிறைந்த ஒரு சமுதாயத்தைப் படைக்கப் போகின்ற முயற்சியில் நாம் இறங்குகின்ற அதே நேரத்தில் எங்களுடைய விடுதலையும் சமத்துவமும் இன்னொரு நாட்டின் ஆதிக்கத்தினால் மேலும் பாதிக்கப் படுவதை உணர வேண்டும். எனவே வெறும் பெண் விடுதலைக்காக மட்டும் போராடாமல் தமிழ் ஈழ விடுதலைக் காகவும் முன்னின்று போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

நாங்கள் உழைக்கிறோம், கடுமையாக உழைக்கிறோம். ஒரு மனிதன் உழைக்கிறான் என்றால் அது தன் குழந்தையின் வாழ்வுக்காக - மனைவியின் வாழ்வுக்காக - குடும்ப வளத்துக்காக - கல்வி வசதிக்காக - முதுமையில் உதவுவதற்காக என்று ஏதோ காரணங்கள் இருக்கும். ஆனால் சிறீலங்காவில் உழைக்கின்ற ஒரு தமிழனுக்கு மேல்வரும் காரணங்களில் ஏதாவது ஒன்று கூடப் பூரணமாக நிறைவேற்ற முடிகிறதா? என்பதை நாம் உணரவேண்டும். அப்படியில்லை என்று நிச்சயமாக தெரிந்த பின்னும் நாங்கள் இன்னும் ஏன் ஒன்றுசேரவில்லை? சுரண்டலும், வறுமையும், பசியும், பிணியும், அடக்குமுறையுமற்ற ஒரு சமுதாயத்தைப் படைக்கின்ற ஒரு முயற்சியில் நாங்கள் ஏன் இன்னும் ஒன்று சேரவில்லை? அது ஒரு சிங்கள தமிழ் அடக்குமுறைப் போராட்டம் என்று அறிந்த பின்னும் நமக்குள்ளே இன்னும் சில அடிவருடும் அற்பத்தனமான அரசியல்வாதிகளை இனம் கண்டு தூக்கிஎறிய நாங்கள் ஏன் இன்னும் ஒன்றுசேரவில்லை? இங்கேதான் பெண்களின் தேவையும் கடமையும் நமக்கு அவசியமாகிறது. போராடப் புறப்படத் தயாராகும் ஒவ்வொரு ஆண்மகனையும் உணர்ச்சியில் புடம் போட்டு அறிவைப் பிரயோகிக்க வைக்கும் முயற்சியில் பெண்களே கைகொடுக்க வேண்டும்.

ஜப்பான் நாட்டின் விடுதலைக்கு அந்நாட்டின் தாய்மாரே காரணம் என்று வரலாறு சொல்கிறது. அந்நாட்டின் வீரத்தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலோடு நாட்டின் தேசியப் பற்றையும் ஊட்டினார்கள். ஆமாம்! உணர்ச்சிமிக்க விடுதலை வீரர்களின் கதையைச் சொல்லியே 'நானும் ஒரு விடுதலை வீரனாக வருவேன்'' என்ற இலட்சிய வெறியை ஊட்டினார்கள். அந்த வீரக் குழந்தைகளின் தாய் விரைவில் விலங்குடைத்தாள்.

ரஷ்யா, செக்கோஸ்லவேகியா போன்ற நாடுகளில் போர்ப் பாசறைகளில் உளவாளிகளாக மாறிய பெண்கள் பலர். தன்னுடைய கடைசிமகன் போருக்குச் செல்லும் போது கூட ''நான் இந்த நாட்டுக்காகப் போராடும் வீரனொருவனைப் பெற்றதாய்'' என்று பெருமை கொள்ளுவாள். தன் நாட்டின் படை வீரர்களுக்குக் களைப்பாறத் தேநீர் கொடுப்பாள். அந்த வீரத் தாய்மாரின் தாய் நாடும் விடுதலை பெற்றது.

மகாத்மா காந்தியைச் சந்திக்கும் வரை, வீட்டை விட்டு வெளியே வந்தறியாத அந்தப் பெண்கள் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டார்கள். பாரதியாரின் உணர்ச்சிமிக்க விடுதலைப் பாடல்களை மேடைதோறும் பாடிக் கேட்போர் நெஞ்சில் விடுதலை உணர்ச்சியைக் கிளப்பிவிட்டார்கள். அந்தப் புண்ணிய பாரதமும் தன் அடிமை விலங்கை அறுத்தது.

இங்கே - தமிழ் ஈழத்தில் ஒரு புதிய வரலாறை எழுதுகின்ற கட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். எங்களுடைய பெண் விடுதலைக்காக, வீட்டு அடிமைத்தனத்துக்கு எதிராக நாங்கள் போராடப்போகிறோம். ஆனால் ஒரு சக்திமிக்க மாதர் இயக்கம் நமக்குள் இன்னும் உருவாகவில்லையே!

சீதனம், சமசம்பளமற்றதன்மை, ஆண்களின் அற்பத்தனமான அடக்குமுறைத்தனம் என்பவற்றை எதிர்க்க வேண்டும் என்று நினைப்போமாயின் நாமெல்லாரும் சக்திமிக்க ஒரு மாதர் இயக்கத்தைத் தொடங்க வேண்டியது அவசியம்.

'சிங்களம் தேர்ச்சிமொழி' என்ற சட்டத்தால் பாதிக்கப்படுகின்ற எங்கள் கணவனுக்கு, சகோதரனுக்கு, குழந்தைக்கு ஏன்? எங்கள் பெண் குலத்துக்காக நாங்கள் குரல் கொடுப்போம்.

இன வாதக் கல்வி முறையாலும், திட்டமிட்ட தரப் படுத்தலாலும் பாதிக்கப்படுகின்ற எங்கள் சகோதர சகோதரிகளுக்காகக் குரல் கொடுப்போம்.

ஒவ்வொரு இனக் கலவரத்தின்போதும் பெண்மையின் சுயகௌரவத்தை அவமானப்படுத்தும் காடைத்தனத்துக்குக் காவல்போடும் ஆட்சியை எதிர்த்துக் குரல்கொடுப்போம். வீடுகள் தோறும் புகுந்து, வீதிகள், கடைகளில் கண்டவர்களை எல்லாம் அடிக்கும் காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

எங்களுடைய தேச விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் சக்திமிக்கதோர் மாதர் இயக்கமாக மாறுவதன் மூலம் எங்கள் சகோதரப் போராட்ட வீரர்களுக்கு அவர்களைக் கவனிக்க, அவர்கள் உற்சாகத்தில் பங்கேற்க அவர்கள் போராட்டங்களில் பணிவோடும், பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் உழைக்க நாங்களும் தயார் என்ற நம்பிக்கையை ஊட்டுவோம்.

எனவே மாதர்களே! எல்லோரும் வெளிச்சத்துக்கு வாருங்கள். அந்நிய ஆடை, அரசாங்க உத்தியோகம், நாகரீக மோகம் என்ற அனுவசிய இருட்குகையில் உங்கள் வாழ்க்கையைப் பாழாக்காதீர்கள். சந்தர்ப்பங்களுக்காகவும், சில வசதிகளுக்காகவும் உங்களையும் உங்களைச் சார்ந்தவர்களையும் சிறை வைக்காதீர்கள். 'தமிழ் ஈழம்' என்கின்ற சுதேச உணர்வுடன் சமத்துவம் சகோதரத்துவம் நிரம்பிய பூரண சுதந்திரமுடைய தமிழ்த் தேசிய இனத்தின் நாட்டை மீட்டெடுப்பதற்கு நாங்கள் ஒன்று கூடுவோம். எங்களைத் தயார்ப் படுத்திக் கொள்ளுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கோழி வளர்ப்பு ........

3' நீளமான தாழ்வாரம் [Eves] விட வேண்டும். கூட்டின் உட்புறத்தை நிரப்ப "கனகூளமாக"(Deep Litter) உமி, மரத்தூள் அல்லது இரண்டையும் சேர்த்துப் பாவிக்கலாம்' கனகூளத்தை ½'- 1' உயரத்திற்குப் போடுதல் நன்று கனகூளம் எந்நேரமும் உலர் நிலையில் வைத்து பாதுகாக்கப்படல் வேண்டும். இதன் பொருட்டு நாம் சோடாச் சுண்ணா ம்பைச் சேர்க்கலாம். ஈரத் தன்மையால் கனகூளம் பறவைகளிற்குப் பல பிரதி கூலங்களை உண்டாக்குகின்றது அவையாவன,

(i) சுவாச நோய்கள் இலகுவில் உருவாகிறது.

(ii) உணவு பூஞ்சணம் பிடிப்பதால், அவற்றின் உண்ணக் கூடிய தன்மை கெடுவதோடு குடல் நோய்கள் ஏற்படக் காரணமாகின்றன.

(iii) நோக்ய்கிருமிகளின் வளர்ச்சியைத் தூண்டுகிறது

(iv) துர் நாற்றம் வீசுகின்றது.

## வளர்ப்பு குஞ்சுகளை பெறல்

நமது தமிழ் ஈழத்தில் பரவலாகக் காணப்படுவன நாட்டுக் கோழிகள் ஆகும், (Country Fowl) இவை நமது நாட்டுச் சுவாத்தியத்திற்கு இயைபாக்கப்பட்டுள்ளதோடு மிகவும் திடகாத்திரமான உடல் அமைப்பையும் கொண்டுள்ளன. ஆனால் இவற்றின் முட்டை போடும் திறன் மிகவும் குறைவாகும். வருடத்திற்கு 100 - 125 முட்டைகளையே போடுகின்றன. இதன் காரணமாக இவற்றை நாம் முழு நேரமாகவோ, அன்றி பகுதி நேரமாகவோ அடைத்து வளர்த்தல் ஆதாயமற்றதாகும். இவற்றை விட மேலைத் தேசத்து இனங்களான "வைற் லெக்கோன்" (White Leghorn) ஆர் ஐ ஆர் (R I R), ஒஸ்ரலொப் (Austrolorp) போன்ற இனங்களும் இன்று பரவலாக காணப்படுகின்றன. இவற்றுள் வைற் லெக்கோன் ஓர் முட்டை இனமாகும். இவை $4\frac{1}{2}$ – 5 மாதமளவில் முட்டை போட ஆரம்பிக்கின்றன. வருடம் ஒன்றிற்கு 250 - 300 முட்டைகள் வரை போடுகின்றன. சிறிய உருவ முடையதும், தூய வெண்ணிறமாகவும் காணப்படும். இவற்றின் கொண்டைகள் (Comp) 5பிளவுகளைக் கொண்டிருப்பதுடன் சேவல்களில் கொண்டை நேராகவும், பேடுகளில் ஒரு புறமாகச் சாய்ந்தும் காணப்படும். இவை மிகக் குறைந்த அளவிலேயே உணவை உட்கொள்கின்றன. [ 3 · 5 அவுன் / நாள் / கோழி ] இப்படியான நல்ல இயல்புகள் பலவற்றைக் கொண்டுள்ள போதும், இவை முற்றாக நமது நாட்டுச் சுவாத்தியத்திற்கு இசை பாக்கப்படாததன் காரணமாக, இலகுவில் நோய்க்கு உள்ளாவதுடன் திடகாத்திரமும், வாழ்தகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

ஆர். ஐ ஆர். ஒஸ்ரெ லொப்:- இவை இரண்டும் உருவத்தில் பெரியன' இவற்றுள்ளும் ஆர் ஐ ஆர் செந்நிறமாகவும், ஒஸ்ரொலொப் கரிய நிறமாகவும் காணப்படும். அநேகமாக இரட்டை நோக்கிற்காக (Dual Purpose) வளர்க்கப்படும். வருடம் ஒன்றில் சராசரியாக 200 –225 முட்டைகளை இடுகின்றன இவை சற்று அதிகமாகவே உணவை உட்கொள்ளுகின்றன. (4 அவுன்ஸ் / நாள் / கோழி ) இவை மிகவும் உறுதியான உடல் அமைப்பை கொண்டுள்ளன' இதன் காரணமாகவே இன்று இவற்றிற்கும் வைற் லெக்கோனிற்குமிடையில் கலப்புப் பிறப்பாக்கலை நடாத்தி, புதிய கலப்பினங்களான ரோவைற் (Raw white ) ஒஸ்ரோவைற் (Austrowhite) ஆகியவற்றை தோற்றுவித்துள்ளார்கள் இவை திடகாத்திரமான உடல் அமைப்பையும், கூடிய வாழ்தகவையும் கொண்டுள்ளதோடு, சிறந்த முட்டை இனமாகவும் காணப்படுகின்றன. இந்த இரண்டு இனங்களுமே இன்று மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன இந்தக் குஞ்சுகளை உங்கள் அருகிலுள்ள மிருக வைத்தியர்களிடம் இருந்து இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது மேலே குறிப்பிட்ட, மேல்நாட்டு தூய இனங்களில் ஏதாவது ஒன்றின் சேவலைப் பெற்று அதை உங்கள் வீட்டில் உள்ள பேட்டு கோழிகளுடன் சேர்த்து வளர்த்து, அவற்றுள்ளும் கூடுதலான முட்டைகளை இடும் கோழிகளின் முட்டைகளை மட்டும் எடுத்து அடைவைப்பதன்மூலம், நீங்களாகவே கலப்பினக்குஞ்சுகளை உருவாக்கிக் கொள்ளமுடியும். இப்படியாகப் பெறப்படும் குஞ்சுகள், ஆரோக்கியமுடையனவாகவும், வாழ்தகவு கூடியதாக இருப்பதோடு, கூடுதலான முட்டை இடும் திறனையும் கொண்டுள்ளன.

## குஞ்சுகளை பராமரித்தல் [Brooder Management]

இதனை நாம் இரண்டு முறையாக நடாத்தலாம்.

[i] இயற்கை முறை;- இயற்கையாகவே தாயுடன் சேர்த்து வளர்த்தல் நாம் முன்பு கூறியது போல் நமது நாட்டுக் கோழிக்கு முட்டைகளை அடைவைப்பதன் மூலம் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் ஓர் கோழியினால் அடைகாக்கக் கூடிய ஆகக் கூடுதலான முட்டைகளின் எண்ணிக்கை 15 ஆகும். எனவே, நாம் இரண்டு கோழிகளிற்கு அடைவைத்து விட்டு, முட்டைகள் பொரித்தவுடன் எல்லாக் குஞ்சுகளையும் ஒரு கோழிக்கே சேர்த்து விடலாம் இந்த வகையான வளர்ப்பு மிகவும் இலகுவானது. ஏனெனில் குஞ்சுகள் தமக்குத் தேவையான வெப்பத்தை தாயிடம் இருந்து பெறுவதுடன், உண்பதற்கும், நீர் அருந்துவதற்கும் கற்றுக்கொள்கின்றன அல்லது உங்கள் மிருக வைத்தியர்களிடம் இருந்து 1 நாள் வயதுடைய குஞ்சுகளைப் பெற்று, அவற்றை அடை இருக்கும் நமது ஊர்க்கோழிகளுடன் சேர்த்து விடலாம். ஆனால் எல்லாக்கோழிகளும் குஞ்சுகளைச் சேர்த்து விடுவதை அனுமதிக்கமாட்டாதாகையால் அதை நிவர்த்திக்க நாம் பின்வரும் வழியைக் கையாளலாம் உங்களிற்கு குஞ்சுகள் எப்பொழுது கிடைக்குமென எதிர்பார்க்கிறீர்களோ, அன்றிலிருந்து 5 — 6 நாட்களிற்கு முன்பதாகவே, உங்கள் வீட்டில் அடை இருக்கும் கோழிக்கு ஓர் சில முட்டைகளை அடைவைத்து அதை தயார்படுத்தி வைத்திருக்கவும் குஞ்சுகள் கிடைத்தவுடன், அவற்றை தாயாக வரப்போ

~~(தொடர்ச்சி மறு இதழில்)~~
11ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சீதனப் பிரச்சினை பேர்சங்கமாய் திரள்வீர் !

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் முன் நிற்க வேண்டிய இளைஞர்களையும் இளம் பெண்களையும் அவ்வாறு செய்யவொட்டாது தடுத்து நிற்பது தமிழரில் இன்று ஊறிப் போயிருக்கும், அரக்கத்தனமான, பிறரை உறிஞ்சிக் குடித்து தான் கொழுக்க நினைக்கும் ஈவிரக்கமற்ற சீதனம் கோரும் சிந்தனையாகும். இச் சிந்தனை தாய்க் குலத்தை வாட்டி வதைக்கிறது. ஆண்களை சந்தைப் பொருளாக்குகின்றது. தாயக விடுதலையை ஓராயிர ஆண்டுகளுக்கும் அப்பால் தள்ளி வைக்கின்றது.

வைத்தியர்கள், பொறியியலாளர், கணக்காளர், பட்டதாரிகள், அரசாங்க எழுதுவினைஞர் முதலியோர் இன்று ஈவிரக்கமின்றி சீதனம் கோருகின்றனர். இச்சீதனம் கோருதலுக்கு பல இடங்களில் பெண்களும் காரணமாயுள்ளனர். தம் கணவன் பண்புள்ளவராக இருக்க வேண்டு மென்பதைவிட உலகப் போலி மதிப்பீடுகள் கொண்டவராக இருத்தல் வேண்டுமென இவர்கள் உன்னுற விரும்புகிறார்கள் பணத்தை ஆணும் பதவியைப் பெண்ணும் விரும்புவதே இன்று திருமணம் என அழைக்கப்படுகின்றது.

தம் சகோதரிகளை வாழ்க்கைப்படுத்த தாம் சீதனம் கோருவதாக் கூறி சீதனம் கோருதலை நியாயப்படுத்த முனைகிறார்கள் சில ஆண்கள் ? தன்னை விற்று தானஞ் செய்யும் இவர்களின் சகோதர பாசம் வரவேற்கத் தக்கதா ?

தமிழ் ஈழ இருபால் இளையோரின் தலையாய பிரச்சினை சீதனப் பிரச்சினையாகும். இதய பூர்வமாக தமிழ் ஈழ விடுதலைக்காக உழைக்க முன்வருவோரையும் சதா கலக்கத்துக்குள்ளாக்குகின்றது இப்பிரச்சினை. இதற்கு தீர்வு உண்டா ?

சீதனப் பிரச்சினை தொடர்பாக மனிதன் மத்திய குழு கூடி ஆராய்ந்தது நிலப் பிரபுத்துவத்தின் எச்ச சொச்சமும் இன்றைய நவ காலனித்துவ அமைப்பும் ஏற்படுத்தும் சமூக நோய்களிற்கு தீர்வு காண்பது அவ்வளவு சுலபமானதல்லவே! தமிழ் ஈழம் சோசலிசக் குடியரசாகும்போது தனிச்சொத்துரிமை இல்லாதுபோக சீதனம் தன்னில் மறைந்துவிடும். இந்த நீண்டகால நிரந்தர தீர்வு ஒருபுறமிருக்க இடைக்கால தீர்வு ஏதுமுண்டா?

சீதனம் கொடுக்காதோ பெறுதோ திருமணம் செய்ய விரும்பும் ஆண்களையும், பெண்களையும் ஒரு அமைப்பில் ஒன்று சேர்த்து அவர்கள் பிரச்சினைகளிற்கு இவ்வமைப்பு மூலம் தற்காலிக தீர்வுகாண மனிதன் முனைகிறான் சீதனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள திருமணம் ஆகாத ஆண் பெண் இருபாலாரும் சீதனத்தை ஒழிக்க விரும்பும் திருமணமகாதோரும் பி வரும் முகவரியுடன் தொடர்பு கொள்க.

மனிதன் சீதன ஒழிப்பு அமைப்பு
அஞ்சல் எண் 81
யாழ்ப்பாணம்

எல்லாத் தொடர்புகளும் அந்தரங்கமாக வைத்திருக்கப் படும். ஏற்கனவே தொடர்பு கொண்டவர்களிற்கு நன்றி ! இது சம்பந்தமாக நல்லிதயம் படைத்தவர்களிடமிருந்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.

---

( 11ம் பக்கத் தொடர்ச்சி )

மாதத்தில் மீண்டும் ஒரு முறை றனிகற் (Ranikhet) தடுப்பு ஊசி மருந்து கொடுத்தல் வேண்டும் காலநிலை மாற்றங்களால் குஞ்சுகள் சோர்வடைந்து காணப்படின் ''ரெறூமைசின்'' (Terramycin) 3 போத்தல் நீரிற்கு 1 தேக்கரண்டி என்னும் விகிதத்தில் கலந்து தொடர்ச்சியாக 2 - 3 நாட்களிற்கு கொடுத்தல் வேண்டும்.

குஞ்சுகளின் வளரும், காலமாகிய, இந்த காலகட்டத்தில் அவற்றின் மத்தியில் தன் ஊன் உண்ணும் [Cannipolism] பழக்கம் காணப்படின் அதை பின்வரும் முறைகளால் திருத்திக் கொள்ளலாம்.

[i] தூள் ஆக்கப்பட்ட கறி உப்பு சிறிதளவை, உணவுடன் கலந்து 4 - 5 நாட்களிற்கு கொடுத்தல்

[ii] பிரகாசமான மின் ஒளியைத் தவிர்த்தல்.

[iii] சில தானிய வகைகளைத் தொங்க விடுவதன் மூலம், குஞ்சுகளின் கவனத்தை அதன் பக்கம் திருப்பல்

[iv] செந்நிறமான மின்குமிழை உபயோகித்தல்.

[v] ஊன் உண்ணும் குஞ்சை அவதானித்து, மற்றயவற்றில் இருந்து பிரித்தல்;

### முட்டை இடும் கோழிகளைப் பராமரித்தல்
### ( Layers Management )

நல்ல பரிபாலனத்தின் கீழ் உள்ள கோழிகள் 5½- 6 மாதமளவில் முட்டை இட ஆரம்பிக்கிறன எனவே, 5ம் மாத ஆரம்பத்தில் இருந்தே படிப்படியாக ''முட்டை இடும் தீன் பாகத்தை'' [Layers mash] கொடுக்க ஆரம்பித்து, ஒரு கிழமைக்குள் முற்றாக முட்டை இடும் தீன் பாகத்திற்கு மாற்ற வேண்டும். இந்தக் காலத்தில் முழு நேர அடைப்பு முறை வளர்ப்பில்' 25 கோழிகளிற்கும் ஒரு நாளிற்கு 6 றாத்தல் உணவு போதுமானதாகும். (3.5 அவு/நாள்/கோழி) பகுதி நேர அடைப்பு முறையில் 4 றாத்தல் போதுமானது (2.5 அவு/நாள்/கோழி) அதோடு முழு நேரமும் அடைப்பில் உள்ளவற்றிற்கு ஒரு கிழமையில் 2 - 3 முறை போதிய அளவு பச்சை இலைகள் கொடுக்க வேண்டும். இவை வசதியாக முட்டை இடுவதற்குச் சில வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும். முட்டை ஓடுகள் மென்மையாகக் காணப்படின், சிற்பி தூளை (Shell grite) உணவுடன் கலந்து கொடுக்கவும். இவற்றை நாம் 3 — 4 வருடங்கள் வரை கலந்து பராமரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கோழி வளர்ப்பு .....

கும் கோழி பார்க்காதவாறு மறைத்து வைத்திருந்து ந்துவிட்டு, அன்று இரவே [எதுவித வெளிச்சமும் இல்லாதபோது ] 5, 5 ஆக ஒவ்வோர் மணித்தியால இடைவேளையில், நாம் தயார்ப்படுத்திய கோழியுடன் சேர்த்து விட்டு, முட்டைகள் எல்லாவற்றையும் அகற்றிவிடவும். மறுநாளில் இருந்தே அவற்றை தன்னுடைய குஞ்சுகள் என நினைத்து பராமரிக்க ஆரம்பித்துவிடும். இங்கு 25 குஞ்சுகளையும் பராமரிக்க ஒரு கோழி போதுமானது இந்த முறையிலான குஞ்சு பராமரிப்பு மிகவும் இலகுவானது. ஏனெனில் நாம் அதிக கவனம் செலுத்தத் தேவையில்லை அதோடு குஞ்சுகளின் இறப்பு வீதமும் மிகவும் குறைவாகும். இந்த முறை வளர்ப்பில் தாய் கோழியை ஒரு மாதத்தின் பின் குஞ்சுகளில் இருந்து பிரித்து விடலாம்.

[ii] செயற்கை முறையில் பராமரித்தல்:- இம்முறையில் குஞ்சுகளிற்குத் தேவையான வெப்பத்தைக் கொடுக்கும் பொருட்டு, மின்சார வசதியுள்ளோர் மின்குமிழையும், அல்லாதோர் அரிக்கன் லாம்பையும் பயன்படுத்தலாம் ஒரு 40 W மின்குமிழ் அல்லது ஒரு அரிக்கன் லாம்பு '50' குஞ்சுகளிற்குத் தேவையான வெப்பத்தைக் கொடுக்கவல்லன. அரிக்கன் லாம்பை உபயோகிக்கும் போது, அதைக்குஞ்சுகள் அணுகாது தடுக்கும் பொருட்டு அதை சுற்றவர ½'' சுற்றுடலில் கம்பிவலை இடவேண்டும் மின்குமிழ் ஆயின் 1½' உயரத்தில் தொங்கவிட வேண்டும். வெப்பம் வழங்கியில் இருந்து குஞ்சுகள் மிகத் தூரத்திற்கு விலக்கிச் செல்லாது தடுக்கும் பொருட்டு, வெப்பம் வழங்கியை சுற்றவர உள்ள ஒரு குறிப்பிட்ட இடம் மட்டுப் படுத்தப் படல் வேண்டும். இதனை நாம் துவாரங்கள் உள்ள "காட் போட்"டினாலே அன்றி கம்பி வலையினாலோ செய்து கொள்ளலாம். முதற்கிழமை 25 குஞ்சுகளிற்கும் 6 ச அ. நிலப்பரப்பு வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிழமையும் இதைப் படிப்படியாக அதிகரித்து 4-ம்கிழமை அளவில் 20-25 ச.அடி வரை வழங்கவேண்டும். குஞ்சுகளின் நடமாட்டத்தில் இருந்து, நாம் அவற்றிற்கு வழங்கும் வெப்பம் போதுமா அன்றி போதாதா என அறிந்து கொள்ளலாம். நாம் கொடுக்கும் வெப்பம் அதிகமானால், குஞ்சுகள் வெப்பம் வழங்கியில் இருந்து விலகியும், வெப்பம் குறைவானால் வெப்பம் வழங்கியை நாடி நடமாடக் காணலாம். இதனை அவதானித்து நாம் மின்குமிழின் உயரத்தை செப்பன் செய்வதன் மூலமாகவோ, அன்றி அரிக்கன் லாம்பின் தூண்டியைச் செப்பன் செய்வதன் மூலமோ சீரான வெப்பத்தை வழங்கலாம். தமிழ்ஈழத்தின் காலநிலையைப் பொறுத்தவரை, கோடை காலங்களில், 3ம் கிழமையில் இருந்தே பகலில் கொடுக்கும் வெப்பத்தை நிற்பாட்டலாம், மழை காலங்களாயின் 4ம் கிழமையில் இருந்தே பகலில் கொடுக்கும் வெப்பத்தை நிற்பாட்டலாம். 5ம் கிழமையில் இருந்து வெப்பம் வழங்கலை முற்றாக நிற்பாட்டலாம்.

உணவு ஊட்டல்:- தாயுடன் வளரும் குஞ்சுகளானால், உணவு உட்கொள்ளக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. தாயில்லாமல் வளரும் குஞ்சுகளிற்கு உணவு உட்கொள்ளக் கற்றுக் கொடுத்தல் வேண்டும் அதாவது ஒரு "பேப்பரில்" சிறுதானியத் துண்டுகளைத் தூவி, பேப்பரை மெதுவாக அசைக்கும் போது குஞ்சுகள் தானியங்களைக் கொத்தி பொறுக்க ஆரம்பிக்கின்றன 3ம் நாளிலே குஞ்சு தீனியை [Chicks Mash] கொடுக்க ஆரம்பிக்கவும். இதை 8 வது தினம்வரை [2ம் மாதம்] கொடுக்க வேண்டும். முழுநேர அடைப்பு வளர்ப்பில், 25 குஞ்சுகளிற்கும் நான்கு கிழமைக்கு 40 றூத்தல் தீனி போதுமானது. பகுதிநேர அடைப்பு வளர்ப்பு முறையில் 30 றூத் போதுமானது. இதே போன்றே அடுத்த நான்கு கிழமைக்கும் முறையே 75 றூத்- 100 றூத் போதுமானது. இவற்றிற்கு நாள் முழுவதும் சுத்தமான நீர் கிடைக்கக் கூடிய வசதியைச் செய்து கொடுத்தல் வேண்டும். அடுத்து நாம் உணவு கொடுக்கும் பாத்திரங்களைக் குஞ்சுகளிற்கு வசதியான உயரத்தில் தொங்க விடுவது மிகவும் நன்று. குஞ்சு பருவத்தை அநேகமாகத் தாக்கக்கூடிய நோய்கள் "கொக்கிடியோசிஸ்" (Coccidiosis) கோழி அம்மை (Fowl pox) கொக்கிடியோசினால் தாக்கப்பட்ட குஞ்சுகள் மெலிந்தும், இறக்கைகளைத் தொங்க விட்டவண்ணமும் காணப்படுவதுடன், அவற்றின் மலம் செந்நிறமாகவும் காணப்படும். குஞ்சுகளை இந்நோய்க்கு உள்ளாகாமல் தடுக்கும் பொருட்டு "சல்பகுயினொக்சலின்" [Sulphaquinoxaline] என்னும் மருந்தை முதல் நாளில் இருந்து 2 மாத காலம்வரை பருகும் நீருடன் கலந்து, 2-3-2-3 5 நாட்களிற்கு ஒருமுறை அடுத்தடுத்து 2 தினங்கள், பருகும் நீர் ஒரு போத்தலிற்கு ஒரு தேக்கரண்டி என்னும் வீதத்தில் கலந்து கொடுத்தல் வேண்டும். இரண்டாம் மூன்றாம் கிழமை அளவில் "றனிகெற்" (Ranikhet) எனப்படும் கோழிக் கொள்ளை நோயை தடுக்கும் முகமாக, தடுப்பு மருந்தை நீருடன் கலந்து கொடுக்க வேண்டும். மாத இறுதியில் கோழி அம்மை (Fowl pox) நோய்க்குத் தடுப்பு ஊசியைப் போடவேண்டும். இவை இரண்டினையும் உங்கள் அருகில் உள்ள மிருக வைத்தியர்களின் உதவியுடன் செய்து கொள்ளலாம்.

வளரும் குஞ்சுகளின் பராமரிப்பு (Growers Management.

குஞ்சுகளின் வளரும் பருவம் 9ம் கிழமை தொடக்கம் 20ம் கிழமை வரையுமாகும். எனவே 9 ஆவது கிழமையில் இருந்து குஞ்சு தீனி (Chicken Mash) கொடுப்பதை படிப்படியாக குறைத்து, அதற்கு பதிலாக வளரும் தீன் பாகத்தை (Grower Mash) கொடுக்க ஆரம்பிக்கவேண்டும்) 10 ஆவது கிழமையில் இருந்து, குஞ்சு தீன் பாரம் கொடுத்தலை முற்றாக நிறுத்தி, தனியே வளரும் தீன் பாகத்தை கொடுத்தல் வேண்டும். முழுநேர அடைப்பு வளர்ப்பில் ஒரு நாளைக்கு 25 குஞ்சுகளிற்கும் 4.5 றூத் தீனி போதுமானது. பகுதி நேர அடைத்து வளர்த்தலாயின் 3 — 4 றூத்தல போதுமானது. மூன்றாவது மாதத்தில் குடற் புழுக்களிற்கு எதிராக 'கூப்பேன்' (Coopane) கொடுக்க வேண்டும். ஒரு பைக்கற் கூப்பேன் 30 குஞ்சுகளிற்கு போதுமானது. இதை நாம் நீருடனோ அன்றி உணவுடனோ நன்றாக கலந்து கொடுக்கலாம். மீண்டும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கொடுத்தல் வேண்டும். மூன்றாவது

( தொடர்ச்சி 10-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீராங்கனைகள் விலை கொடுக்கின்றார்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

[சென்ற இதழில்: பங்களாதேஷில் அதன் 9 மாத கால விடுதலைப் போரின்போது 200,000 இற்கும் மேற்பட்ட வங்காளப் பெண்கள் பாக்கிஸ்தான் துருப்புகளாலும் அவர்களுக்கு ஆதரவளித்த உள்ளூர் 'ரஸாக்கர்'களாலும் கற்பழிக்கப்பட்டனர். 8 வயதுச் சிறுமிகளும் 75 வயதுப் பாட்டிகளும் கூட பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். பாடசாலைப் பெண்கள் தன்னும் கடத்திச் செல்லப்பட்டு இராணுவ விலை மாதர் விடுதியில் போர் முடியும்வரை கைதிகளாக வைக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் பலரால் தகாத முறையில் உபயோகிக்கப்பட்டனர். ஜனவரி இதழில் பக்கம் 2, 12 ஆம் பக்கம் பார்க்கவும்.]

டீ அரசோ டாக்கா நகர்ப்புறத்தையடுத்து வாழ்ந்த கமலாபேகம் என்ற விதவையின் கதையையும் எழுதுகிறார். தாக்குதல் தொடங்கியதும் அவர் தமது இரு மகள்மாரையும் பாதுகாப்பிற்காகக் கிராமத்திற்கு அனுப்பி வைத்தார் தனக்கு அதிகம் வயதாகிவிட்டபடியால் அவர்களின் கவனம் தம்பக்கம் திரும்பாது தாம் பாதுகாப்பாக இருக்கலாம் என்னும் நம்பிக்கையில் அங்கேயே தங்கினார். ஆனால் அவர் இரு பாகிஸ்தானியராலும் ஒரு ரசாக்கராலும் அவரது வீட்டில் வைத்துப் பலவந்தப்படுத்தப்பட்டார்.

பின் தங்கிய சமூகங்களின் கற்பழிப்பின் பாதிப்பும் அதன் பயங்கரமான விளைவுகளும் பங்களாதேஷில் நன்றாகக் காணக்கூடியதாகவுள்ளது. அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களை மணம் செய்து கொடுக்கும் நடவடிக்கைகளை எடுத்தது. ஆனால் திருமணம் செய்பவர்கள் முக்தி பகினி விடுதலை வீரர்கள் சிலரும் கூட பெருமளவு சீதனத்தை எதிர்பார்த்தனர்.

"அவர்களின் கோரிக்கை புதியரக ஜப்பானிய கார் தொடக்கம் தங்கள் பிரசுரிக்கப்படாத கவிதைகளைப் பதிப்பிக்கும் செலவை ஏற்பதுவரை இருந்தன." என்று அரசாங்க அலுவலர் ஒருவர் கசப்புடன் குறைப்பட்டார். கற்பழிக்கப்பட்டவர்களில் பரிசோதிக்கப்பட்ட எல்லோரும் பாலியல் சம்பந்தமான நோய்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று பங்களாதேஷிலுள்ள ஆஸ்திரேலிய வைத்தியர் ஒருவர் கூறியதாக நியூயோர்க் ரைம்ஸ்சில் ரொபேட் ரறம்பெல் என்பவர் குறிப்பிட்டார். உள்நாட்டு வைத்திய முடிவுகள் பலவிதமாயிருந்தன.

சர்வதேச கருச்சிதைவு ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தைச்சேர்ந்த டாக்டர் ஜியோபிரே டேவிஸ் பெருந்தொகையான தற்கொலைகளும், சிசுக்கொலைகளும் நடந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அன்னை திரேசா டாக்காவிலும் இன்னும் 17 மாவட்டங்களிலும் ஆரம்பித்துவைத்த குழந்தைகளைச் சுவிகாரம் செய்தலும் திட்டமிட்ட பெற்றோர் பராமரிப்பு முறையும் இதற்கு ஒரு முடிவை ஏற்படுத்தின. கருச்சிதைவிற்கு உள்ள எதிர்ப்பைப் போக்கும் முகமாக வங்காளிப்பெண் தொண்டர்கள் தாங்களாகவே வசதிகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். இவ்வேலைகட்குத் தலைமை தாங்கிய தகேரா சாபிச் அம்மையார் கற்பழிப்புத் தவறான சொல்லென்று வாதிட்டதுடன் பங்களாதேஷ் பெண்கள் அனுபவித்த கொடுமைகளை விபரிக்கச் சித்திரவதை என்ற சொல்லை உபயோகித்தார்.

பாகிஸ்தானிய அதிகாரிகள் எவ்வளவு தூரம் கற்பழிப்பை ஊக்குவித்தார்கள் அல்லது அதற்கு இடங்கொடுத்தார்கள், என்பது பற்றி மால்க்ராஜ் ஆனந்த் என்ற இந்திய நாவலாசிரியர் எழுதுகிறார்.

அங்கு 'ஒரு புது வம்சத்தை உருவாக்க அல்லது வங்காளி தேசிய இரத்தத்தைக் கலப்படம் செய்யும் முயற்சியாவது மேற்குப் பாகிஸ்தானியரால் திட்டமிடப்பட்டிருந்தது.'' பாசறைகளில் கீழ்த்தரமான பாலியல் படங்கள் காட்டப்பட்டதாகவும் கூறப்பட்டது." பாசறைகளில் போர் வீரர்கள் எதைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். பெண்களையும் பாலியலையும் பற்றித்தான் அப்படிப்பட்டவர்கள் கையில் துப்பாக்கியைக் கொடுத்து அவர்கள் பாட்டில் ஒரு மக்களினத்தைப் பயமுறுத்தி அடக்குங்கள் என்று விட்டால் அவர்கள் மனதில் வேறு என்ன எண்ணம் முதலில் வரும்.

(நன்றி லங்கா கார்டியன்)

"மனிதன்" வருட சந்தா ரூபா 7/50 சதம்

(அஞ்சல் செலவு உட்பட)

12 இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் சந்தாப் பணத்தை அ. விமலதாசன் எனும் பெயரிற்கு

யாழ்ப்பாண அஞ்சல் நிலையத்தில் மாற்றக்கூடிய தபாற் கட்டளையாகவோ அன்றேல் காசுக் கட்டளையாகவோ அஞ்சல் பெட்டி 81-க்கு அனுப்பி வையுங்கள்.

இப்பிரசுரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள திரு. அ. விமலதாசன் என்பவருக்காக யாழ்ப்பாணம் 102, பிரதான வீதியிலுள்ள சென். பிலோமினா அச்சகத்தில் அச்சிட்டு 27-2-79-ல் வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the G. P. O. Under no Q. B. 8935/78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media